15

REGISTERED No. M.

ஓம்.

நாமகள் நற்றுணை.

# தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

## தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க. { பிங்கள ௵ கார்த்திகை ㍂ / 1917-ம் ஆ நவம்பர் ㍂ } மதி — உ.

உள்ளுறை.


| | | பக்கம். |
|---|---|---|
| க. | அறத்துட் சிறந்தது யாது? ... ... ... | கரு. |
| உ. | பத்துப்பாட்டு ... ... ... ... | கஎ. |
| ௩. | வசனக்குறிகள் ... ... ... ... | உ0. |
| ச. | உண் என்பத னிலக்கணம் ... ... ... | உக. |
| ரு. | கம்பர் சரித்திரம் ... ... ... ... | உஉ. |


பத்திராசிரியர்:— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்,
(முதலியார்பேட்டை)
புதுவை.

வருடச் சந்தா விவரம்:

| | | | |
|---|---|---|---|
| உள்ளூர்க்கு | ரூ ᳵ | வெளிநாட்டுக்கு | ரூ க |
| வெளியூர்க்கு | ரூ ஷ | தனிப் பிரதி | அணா க |

## புதுவைத் தமிழ்ச்சங்கம்.

மதுரைமுதலிய இடங்களிற்போலப்புதுவையினும் "தமிழ்ச் சங்கம்" ஒன்று வைத்து நடாத்தற்குப் பலகால் எண்ணியிருந்து சென்ற நள ஆண்டு மாசி மீ கூ-ம் வ மங்களவாரம் மகாசிவராத்திரி கூடிய புண்ணிய தினத்தில் இரவு எ - மணிக்குப் பலநன்மக்கள் ஒன்றுகூடிப் புதுவை வேளாளர் வீதி ஸ்ரீ நந்திதேவ ராலயத்தின் கண் அமர்ந்து பலவாறெல்லாம் ஆலோசித்து "புதுவைத் தமிழ்ச் சங்கம்" என, பெயரிட்டு ஓர் சபையை அவ்விடத்தேஸ்தாபித்தனர்.

அச்சங்கத்தின் நோக்கம்: தமிழ் வளர்தற்கேற்ற முயற்சிக ளெல்லாம் செய்யவேண்டு மென்பதேயாம்.

முதலில் இச்சங்கத்தினர் வாரம் இருமுறை கூடி ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய சிறுநூலாராய்ச்சி, ஔவையார்சரித ஆராய்ச்சி முதலியன செய்துவந்தனர். நிகழும் பிங்கள ஆண்டு வைகாசி மீ உகூ ம் - வ சோமவாரம், காலை - எ - மணிமுதல் கO - மணிவரையில் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடா லயத்து ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிக ளவர்களை வருவித்து அவர்கள் "தமிழின் தொன்மையும், அதன் வளர்ச்சியும்" என்பதுபற்றி மகோபந்நியாசம் புரிந்தருள, அத் தருணமே ஷ புலிசை ஸ்ரீமத், ஞானியார் மாணவர்கழகம் ஸ்ரீமான், பாலசுந்தர நயினாரவர்கள் 'நட்பு' என்ற விஷயத்தை நயமுறப்பேச இவற்றை மகாசன சமூகத்துடன் இருந்துகேட்டு மகிழ்வெய்தினர். பிறகு ஆனி மீ உக-ம் வ புதவாரம் முதலாக மாலை கூ - மணிமுதல் அ - மணி வரையில் தினந்தோறும் திரு விளையாடற்புராணமும், நன்னூலும், பாடமாக முறையே நடத்திக் கொண்டு வருகின்றனர். ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலையில் பெரியபுராணப் பிரசங்கமும் செய்துவருகின்றனர்.

ஐப்பசி மீ ஆயுதபூசையன்று நாமக ணற்றுணை கொண்டு "தமிழ் மகவு" என்னும் மாதாந்தப்பத்திரிகை முதற்சஞ்சிகை யை வெளியிட்டு ஏனையமதிகடோறும் அவ்வாறு வெளியிட முன் வந்திருக்கின்றனர்.

---

**புதுவை வித்துவான் ஸ்ரீமான், பு. அ. பெரியசாமிப்பிள்ளை அவர்கள் கூறிய வாழ்த்து.**

சீரார்குபேரனிற் பாக்கிய மிக்குறுஞ் செல்வர்களும்
நாரார் கலைமக ணீங்காதுறையுஞ்செந் நாவினரும்
நேரார்ந்திலகும் புதுவையி னுளு நிகழுகின்ற
வாரார்தமிழ்ச் சங்க மெந்நாளுமோங்கியே வாழியவே.

17



ஓம்.

நாமகள் நற்றுணை.

# தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க. | பிங்கள ௵ கார்த்திகை ௴ / 1917-ம் ௵ நவம்பர் ௴ | மதி — உ.

## தமிழின் சிறப்பு.

பொருப்பிலேபிறந்து தென்னன் புகழிலே கிடந்துசங்கத்
திருப்பிலேயிருந்து வையை யேட்டிலே தவழ்ந்தபேதை
நெருப்பிலேநின்று கற்றோர் நினைவிலே நடந்தோரேன
மருப்பிலேபயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.

## அறத்துட் சிறந்தது யாது?

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினையெல்லாந் தரும். (குறள்)

பலதிறப்பட்ட உயிர் வர்க்கம் எல்லாம் சரம் அசரம் என இருவகைப்படும். சரம்:—மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, (சர்ப்பம், புழுமுதலியன) நீர்வாழ்வன (மீன் முதலியன) என்பன. அசரம்:— புல் மரம் முதலிய தாவரங்கள். இவ்விரண்டினும் உயர்ந்தது சரமே; அவற்றுள்ளும் மனிதர் உயர்ந்தோர்; அவர்களினும் அறிவு பேதத்தான் உயர்ந்தோரும் தாழ்ந்தோருமுளர். கொல்லாமை முதலிய தரும குணமுடையோர்களே உயர்ந்தோர். கொலை முதலிய பாவச்செய்கை யுடையோரே தாழ்ந்தோர். இங்குக் கொலையை முதலாகக்கொண்டு கூறியது பாவத்திற்கெல்லாம்

அது தலையாயிருத்தல் பற்றியேயாம். இது யாவரும் மறுக்கக் கூடாததொன்றும். ஆயினும், 'எல்லாக் கொலையாலும் பாவம் இன்று மனிதரை மனிதர் கொல்வதே பாவம்' ஆகும் என்கின்றனர் சிலர். அஃதென்னை? பிறவுயிரைக் கொல்லும்போது அதற்குக் கஷ்டமின்றோ? வெனின், அவர் கூறுவதாவது: துன்பம் உண்டு; ஆனாலும், கர்த்தர் மனிதர்க்கு உபகாரமாகவே மிருகாதிகளைப் படைத்தார் என்பது. அங்ஙனமாயின், ஈ-புழு முதலிய சிறு ஜெந்துகள் உமது இரைக்கு உதவவில்லையே! எனின், சிறிய ஜெந்துகளெல்லாம் பெரியஜந்துகட்கு இரையாய் ஒன்றுக்கொன்று வேண்டியிருத்தலின், பாரம்பரியத்தில் (முறை முறையாக) மனிதர்க்கு உபகாரமாகப் படைக்கப்பட்டதே யென்கின்றனர். சிங்கம், புலி முதலியன மனிதர்க்கு இன்னல் செய்கின்றனவே; ஆகையால், மிருகாதிகளை மனிதர்க்கு உபகாரமாகப் படைத்தார் கர்த்தர் என்பது கூடாது எனின்: அவர் "ஆதியில் கர்த்தர் ஒரு மனிதனைப்படைத்து மிருகாதிகளையும் அவனுக்கு அடங்கச் செய்து இன்னபடி நட என்று ஒரு புத்தியுங்கூற, அவன் அப்படி நடவாமல் தவறியதால், 'மிருகாதிகள் உனக்கு அடங்காமல் போக' என்று சபித்துவிட்டார்: அதனால், அவனுக்கும் அவன் சந்ததியார்க்கும் மிருகாதிகள் அடங்காமற் போயின." என்கின்றனர். அங்ஙனமாயின், ஆடுமாடு எருமை கோழி முதலியன மனிதர்க்கு அடங்குவது என்? என்று கேட்பின், புலி சிங்கம் முதலியன அடங்காமையும், மாடு ஆடு முதலியன அடங்குதலும் கருத்தர் கட்டளையே என்கிறார்கள்; அம்முறையும் மாறி ஓரோர்கால் சிங்கம் புலி முதலியன மனிதர்க்கு அடங்கித் தொழில்செயலும், மாடு முதலியன அடங்காமற் கொம்பாற்குத்தி வருத்தலும் நேரிற் காண்டலால் மனிதர்க்கு உபகாரமாக மிருகாதிகள் படைக்கப்பட்டன வென்பது சிறிதும் ஒவ்வாதாம். இவ்வாறானால், கடவுள் எல்லா உயிர்களையும் ஒருபடியாகப் படைக்காமல் பல பேதமாகப் படைத்தலால் பக்ஷவாதிபோலும்! எனின், முன் செய்த கருமங் காரணமாக: உயிர்கள் பலவகையாகப் பிறக்கும். ஆகையால், இத்தோஷம் கடவுள்மேற் கூறல் கூடாது என்பதாம்.

இனி ஒரு மதத்தர் கூறுவதாவது:— "சரம் அசரம் எல்லாம் சீவனுயிருக்க மர முதலிய உயிர்களைக்கொன்று தின்றலும் பாவமே" என்பது. இது சரியே; ஆயினும், மர முதலியவற்றைக் கொன்றருந்தும் பாவம் மிகச்சிறிதே. மிருகாதிகளைக் கொன்றால் வரும்பாவம் அவ்வளவு அசாக்கொலையிலில்லை. அல்லாமலும், மிருகம் முதலியவற்றின் சில உறுப்புக்களைக் குறைத்தால் இறந்துவிடும்; மாம் முதலியவற்றின் சில பாகத்தைக் குறைத்தாலும் உயிர் நீங்காது; பின்னும் கிளைக்கும். அவைகளிற் பெறுகின்ற இலை காய் அரிசி முதலிய உணவையும் தேவர், அதிதி, தேசிகர் இவர்கட்கு உண்பித்துப் பின் உண்டால் அசரக்கொலையால் வரும் சிறிது பாவமும் நீங்கி, உழுதல், கூலிவேலை செய்தல், வாணிகம் செய்தல், சினமிகுத்தல், அசத்தியங்கூறல், வீடு தூர்த்தல், மெழுகுதல், நெருப்பு மூட்டுதல், தண்ணீர் கவர்தல், நெற்குத்துதல், என்ற பத்து விதத்தால் வரும்பாவமும் அவ்வப்போது அழிந்து விடும்.

தலத்துழல் கூலிவேலை சந்தையிற் கொண்டுவிற்கை
குலைத்த சொற்கூட்டுங் கோபம் அசத்தியங் கூறலுள்ளு
மலக்கிடன் மெழுகலங்கி யாக்கனீரரிசி யென்றே
இலக்கணத் தியம்பும் பத்துந் தமக்கெனிற் பாவமீட்டும்.
(சிவ தருமோத்தரம்)

தலைமைகொள் குருசிவ சரங்கட் காகவே
உலையிடு மரிசியன் றேருங்கன் மத்தெறி
அலையமு தாந்தமக் காக வாக்குறிற்
கொலைசெயு நஞ்சினுங் கொடிய தாகுமால். (பிரபுலிங்கலீலை.)

தேவர் தென்புலத்தோர் துறந்தவர்க் களித்த
சேட நல்லமிர் தினு மினிதா
மியாவரே யெனினு மதிதிய ரிறந்தோ
ரிமையவர் இங்கிவர்க் கின்றிக்
கூவல்போ லாழ்ந்த பாழ்வயி றதனிற்
கொட்டுதற் கமைத்தவெண் சோறு
நாவுறை புழுவா மெனமறை யனைத்து
நவின்றிடு மென்பர்நன் குணர்ந்தோர். (காசிகாண்டம்.)

தேவ ரதிதியன நேசிகர்க்கென் றட்டவனம்
தேவருல கத்தமுத மென். (சைவசமயநெறி.)

இவற்றால், அசரக்கொலையில் வரும்பாவம் அழியுமாறு கூறப்பட்டது.

இங்ஙனமே குரு முதலியோர்க்கு மாமிசத்தை நிவேதித்து உண்ணின் அந்தப்பாவமும் ஒழியாதோ? வென்னின், ஈசுராதி தேவதைகளுக்கும் குருமுதலியோர்க்கும் பிரீதி இல்லாத மாமிச நிவேதனத்தால் சரக்கொலைமையுந் தீராமல், அநர்ப்பிதமாகலான் அதிபாதகமும் வரும் என்க. கண்ணப்ப நாயனர் முன்பு மாமிசம் இட்டு முத்திபெற்றிருத்தலின், மாமிசம் ஈசுரப்பிரீதியே யென்று கூறின், கண்ணப்பர் போலப் பிறரும் அவ்வாறு செய்யலாகாது;

ஏனெனிற் கூறுதும்: கண்ணப்பர் பூர்வசன்மத்தில் செய்த தபோ பலத்தினுலே காளத்தி ஈசுரரைக் கண்டமாத்திரத்தில், பேய்கோட் பட்டவன் சரித்திர முழுதும் பேயின் சரித்திரமானதுபோல, அவரது சரித்திரமெல்லாம் காளத்தியப்பரது சரித்திரமாய் நிற்றலால், அவர்க்கு மோக்ஷம் கைகூடிற்று. கண்ணப்பர் ஒரு ஆசிரியனை யெய்தி, இது பாவம் இது புண்ணியம் இது செய்யலாகாது இது செய்யலாம் என்று ஒருகாலும் கேட்டறிந்தவரும் அல்லர். அவர் முன்பு பழகியிருந்த பழக்கத்தைப் பின்பும் பத்தி மிகுதியாற் செய்தனர். அவர்போல மாமிசம் நிவேதிக்க எண்ணின் வாய்நீரால் அபிஷேகம் செய்து செருப்புக்காலால் உதைப்பதும் செய்யவேண்டும். அப்படியுஞ் செய்யலாமென்று ஒருவன் நினைத்தானுகில், அவன்போய் விழும் நரகத்தில் பின் விழும் பாவிகள் ஒருவரும் இல்லை. இவ்வாற்றால் கண்ணப்பர் பத்தியின் செயலை விதியென்று கொள்ளுதல் கூடாது. கண்ணப்பர் போலக் கண்ணைத்தோண்டி அப்புவார்களா யிருப்பின் அவர் போற்செய்க. தாதையைத் தாளற வீசிய சண்டேசுரர்க்கு ஈசுரன் பொற்கோயிலும் போனகமும் சோதிமணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும் ஈந்தார்; சிறுத்தொண்டர் மைந்தனை யரிந்து சமைத்து விருந்திட்டு மா தேவனருள் பெற்றார். என்று தெரிந்து முத்தியை விரும்பினுரெலாம் அவர்கள் செய்த அவ்

வாறே செய்யலாமோ? இவைபோல்வன வெல்லாம் உலகியலைக் கடந்த பத்தியின் மிகுதிப்பாடன்றோ? இவ்வகைச் செயல்களைப் பிரமாணமாகக் கொண்டு வேத சாஸ்திரங்கட்கும் பெரியோர் வழக்கிற்கும் முரண்ட மொழிவது அறிவுடையோர் செயலன்று. நிற்க. இனிச்சத்தி பூசைக்கு மாமிசம் நிவேதிக்கலாம் என்று சிலர் கூறினும் அது வேத விரோதமாகலாற் கூடாது. வேறு ஒருவன் ஒரு உயிரைக்கொன்று அதனூனை உண்பித்தால் உண்ணலாம் என்று பௌத்தர் கூறுவர். அதுவும் பொருந்தாது: கொன்றார் பாவந்தின்றார்க்கு முண்டு. ஏனெனின், பிறன் ஒரு உயிரைக் கொல்லும்போது விலக்கினல் மாமிசம் தனக்குக் கிடைக்காதென்று ஊனுண்போர் உடன்படவேண்டி வரும். ஆகையால், அவர்க்குப் பாவம் வருவது திண்ணம்.

(தொடரும்)

தருமோபதேசி.

---

## பத்துப்பாட்டு

(எ - ம் பக்கத்தொடர்ச்சி.)

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு" என எடுத்து "பழமுதிர் சோலை மலைகிழ வோனே." என, இந்நூலை முடித்திருப்பதால், முருகப்பிரான் நக்கீரர்முன் தோன்றி அவர் குறைமுடித்து 'நீ என்னைக்கிழவனென்று பாடினையே' என, உடனே நக்கீரர்,—

"குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையா — யென்றும்
இளையா யழகியா யேறூர்ந்தா னேறே
உளையாயென் னுள்ளத் துறை."

என்று தொடங்கிச் சில செய்யுட்களாற்றுதிக்க, அதற்கு மிகவுமுகந்த முருகப்பெருமான், "இத்திருமுருகாற்றுப்படையை அன்புடன் பாராயணஞ் செய்பவர்க்கு வேண்டிய வரங்கள் தருவாம்" என்று திருவாய்மலர்ந்தருளிச் சென்றனர் என்று செப்புகின்றனர் பெரியோர். இனி, இத்திருமுருகாற்றுப்படையினிடத்

துள்ள சில அடிகள் படிப்போர்க்கு இனிமைவிளங்க ஈண்டு வரையப்படுகின்றன.

“நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமர் செல்வ!
ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகண் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவி லொருவ! பொருவிறன் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ! மைந்த ரேறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே!
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக!
நசையினர்க் கார்த்து மிசைபே ராள!
அலந்தோர்க் களிக்கும் பொலம் பூட்சேஎய்!
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்!
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்!
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசிலு மெனப்பல
யானறி யளவையி னேத்தியா னாது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையின்,
நின்னடி யுள்ளி வந்தனெ னின்னொடு
புரையுந ரில்லாப் புலமையோய்! எனக்
குறித்தது மொழியாவளவையிற் குறித்துடன்

வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவு நல்லவு நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல் விளங்குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
அணங்கு சாலுயர் நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
அஞ்சல் ஓம்பு மதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருணிற முந்நீர் வளைஇய வுலகத்
தொருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்கு மதி"

இவற்றில், இரவலன் முருகப்பிரானை ஏத்துமெழிலும், அவரருளு மழகும் விளங்குதல் காண்க.

ஒரு பெண் இதனை அன்புடன் பாராயணம் செய்து முருக! முருக! முருக! எனச் சதா சிந்தித்திருக்கையில் முருகன் என்றபெயருடைய அயலான் ஒருவன் மாட்டுக் காதல்கொண்டதாகக் கருதி, கணவன் அவள் கையைத் தடிய, அப்போழ்தும் அவ்வனிதை இந்நூலை அன்புடன் ஓதவே, முருகக் கடவுள் அவட்கு எதிர் தோன்றிப் பலருங் கண்டு தொழ, பாகதியளித்தனரென்பது,—

ஒருமுரு காவென்ற னுள்ளங் குளிர வுவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தீன்புலம் பாநிற்பத் தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே.

இவ்விருத்தப்பாவில் விளங்கித் தோன்றும்.

இதுகாறும் திருமுருகாற்றுப்படையைப் பற்றிக் கூறியாயிற்று.

(தொடரும்)
பத்திராசிரியர்.

## வசனக்குறிகள்.

(௬ = ம் பக்கத் தொடர்ச்சி.)

(௨) ஆனல், ஆயினும், ஆகவே, ஆகையால் என்கிற சொற்களின் ஈற்றில் காற்புள்ளி வருதற்குதாரணம்:— (ஆனல் முதலிய மொழிகளின்மேல் அரைப்புள்ளிவரும்.)

“கீசகன் வண்ணமாதை மருவ எண்ணினன்; ஆனல், அது தெய்வத்திற்கும் சம்மதி இல்லை; ஆகையால், அக்கீசகன் வீமன் கையால் இறந்தொழிந்தான்.” இவ்வாறு பிறவும் வரும்.

(௩) ஒரு தொடரில்வரும் பலபெயர்கட்குமுன் காற்புள்ளி வருவதற் குதாரணம்:—

“அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி இந்நான்கும் ஆண்மைக்குணம்.” “நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு இந்நான்கும் பெண்மைக்குணம்.”

(௪) பொருண் முடிவடையாத பல ஒரேவித முற்றுக்களிடையில் காற்புள்ளிவருதல்: (உ-ம்)

“கடவுள் நிலனனர், நீரானர், நெருப்பானர், காற்றானர், வானனர், ஞாயிறானர், திங்களானர், உயிரானர்.” இங்ஙனமாதலின் அட்டமூர்த்தி யெனப்பட்டனர்.

(௫) வந்தால், போனல், போல, ஆல் இவற்றின்முன் காற்புள்ளி வருதல்: (உ-ம்)

“சீதை இம்மானைப்பிடித்து வந்தால், என் மனமகிழும் என்றாள்” “புண்ணியஞ் செய்யாமற்போனல், பாவம் தானே வரும்.” “புலிபோல, அவன் பாய்ந்தான்” “காளமேகப் புலவர்க்குத் தேவியின் அருளிருந்ததால், அதி விரைவாய்ப் பாடினர்”

(௬) ஐய, அரசே, முதலிய விளி வேற்றுமையின்பின் காற்புள்ளி வருதல்: (உ-ம்)

“மைந்த, வருவாயில் கால்வழங்கி வாழ்க” “மனிதர்காள், இங்கு வாருங்கள்.”

---

( ; ) இவ்வரைப்புள்ளி தொடர்புடைய முற்றுக்களினீற்றிலும், முடிந்த வாக்கியத்தை வேறுகாரணம்பற்றி எடுத்து விளக்க வந்தபோது முதலில் எழுதும் முற்றின் ஈற்றிலும் வரும். (உ-ம்)

(க) இராவணன் இறைவனைக்கண்டபோது அதிசயித்தான்; உடல் புளகித்தான்; வேர்த்தான்; விழுந்தெழுந்தான்; ஆடிப்பாடினன்; ஆனந்தக் கண்ணீர் விட்டான்; அருள்வேண்டினன்.

(உ) நான் வெளியூர்க்குப்போய்க் கஷ்டப்பட்டு வந்தேன் சுகமே இல்லை; ஆயினும் ஒரு நல்லசிநேகம் கிடைத்தது.

அறஞ்செய்தான் சுவர்க்கம்புகுவான் நரகடையான்; ஆகவே, யாவரும் புண்ணியம் புரிமின். (தொடரும்)

தமிழ் மாணவன்.

---

## உண் என்பத னிலக்கணம்.

சோறுண்டான். கறிதின்றான். நீர் பருகினன். எனவரல் முறை. இம்மரபு மாறலாகாது.

"ஊன் றுவை கறிசோறுண்டு
வருந்து தொழிலல்லது" என்றவழி,

துவை (பச்சடி.) கறி என்றவற்றையும் உண்டு என வருதல் மரபன்றுபோலும்? எனின், ஊண்டலென்பது – உண்பன தின்பன வெனப்பிரித்துக் கூறும் வழிச்சிறப்பு வினையாம்; பசிப்பிணிதீர நுகரப்படும் பொருளெல்லாம் உணவெனப்படுமாகலின் பிற இடங்களிற்பொது வினையுமாம். அதனால் இங்குக்கூறியது வழுவன்று. இனிக் கறியொழித்தேனைய வற்றிற்கெல்லாம் உண்டற்றொழில் உரித்து. கறி தின்றலென்ற வழக்கிற்கே யுரியது.

"அறுசுவை யடிசி லணியிழை தருதலின்
உறுவயிறா வோம்பாது தின்றென"

இங்கு இழித்தற்கண் அடிசில் தின்றென வந்தது.

"உடலக் கண்ணனுலகு கவர்ந்துண்ட
களவுடை நெடுஞ்சூர்." (கல்லாடம்)

"கூற்று யிருண்ட தடித்தலமே." (சிதம்பரச் செய்யுட்கோவை.)

"அகி லுணவிரித்த வம்மென் கூந்தல்" (சிறுபாணாற்றுப்படை.)

"தோணல முண்டு துறக்கப் பட்டோர்." (கலித்தொகை.)

"கோங்குண் மலர்க் கோதையொடு." (சீவ–காந்த-358)

"கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்." (குறள்)

என வந்த இலக்கியங்களுக்கு இலக்கணம் என்னையெனின்:

"உண்டற் குரியவல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலுமரபே."

என்ற தொல்காப்பியம் பொருளியற் சூத்திரத்தின் விதியினாற் கொள்க.

"வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்க முரைக்கக்கேள் — மண்டி
நெருக்குண்டேன் றள்ளுண்டே னீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண்டிலேன்."

இத்தொடர்பில் நெருக்குண்டேன், தள்ளுண்டேன், சுருக்குண்டேன் என்பனவற்றில் வந்த 'உண்' செயப்பாட்டு வினைப் பொருள் விகுதி. நெருக்கப்பட்டேன், தள்ளப்பட்டேன், சுருக்கப்பட்டேன் என்பதே பொருள்.

(பத் — ர்)

## கம்பர் சரித்திரம்.

(கக - ம் பக்கத்தொடர்ச்சி.)

மதுரைக் கணக்காயனார் மகனார்-நக்கீரனார் இயற்றிய திருமுருகாற்றுப்படை முருகப்பிரானைப் பற்றியதாகும். பெரும்பாணாற்றுப்படை பாடிய கடியலூர்-உருத்திரங் கண்ணனார் அவ்வாற்றுப் படையில் காஞ்சிப்பதியிலுள்ள திருமாலின் திருப்பதிகளுள் ஒன்றாகிய திருவெஃகா வென்னுந் திருப்பதியை மிகவும் பாராட்டிக்கூறி யிருக்கின்றனர். எட்டுத்தொகை நூற்களினும் இவ்வகை காணப்படும்.

வைஷ்ணவ சமயாசாரியர்களாகிய (ஆழ்வார்கள் பதின்மரும் மதுரகவிகளும் ஆண்டாளுமாகிய) பன்னிருவருள் முதல் ஆழ்வார்கள்எனப்படும் பொய்கையார், பூதத்தார், பேயார்என்னு மூவரும் திருமழிசையாரும் அக்காலத்திற் றோன்றியவர்களே. பதினெண் கீழ்க்கணக்கிற்சேர்ந்த களவழி நாற்பது, இன்னிலை என்னும் இரு நூற்களும் அவர்களுள் ஒருவராகிய பொய்கையாராற் பாடப்பட்டனவே. திருக்குறளிற் கூறப்பட்டுள்ள கடவுள் வணக்கத்தைப் பற்றி ஈண்டு யாதொன்றுங் கூறற்குரியதன்று. இதுகாறுங்கூறிய

சான்றுகளே போதியனவா யிருத்தலின் மற்றுமுள்ள சான்றுகளைக்கூறுமல் இம்மட்டோடு விடுகின்றேன். மணிமேகலையில், சமயக்கணக்கர் தந்திறமுரைத்த காதையிற் கூறப்பட்டுள்ள மதங்களைப்பற்றி ஈண்டுக்கூறுதல் பயனுடையதன்ருகலின் அவை கூறுமல் விடுக்கப்பட்டன.

## கடைச்சங்கக் காலத்து நூற்கள்.

முதற்சங்கக்காலத் தியற்றப்பட்ட அகத்தியமும், தொல்காப்பியமும் கடைச்சங்கத்தார்க்கு இலக்கணங்களா யிருந்தன என்றலின் தொல்காப்பியத்தோடு அகத்தியமும் அக்காலத்திருந்தது என்று தெரிகின்றது. கடைச்சங்கக் காலத்துக்குப் பிற்பட்டவராகிய ஐயனுரிதனுர் அகத்தியர் தம்மாணவர் பன்னிருவருங்கூடியியற்றிய பன்னிரு படலத்தை முதனூலாகக்கொண்டு புறப்பொருள் வெண்பாமாலை யென்னும் புறப்பொருளிலக்கணஞ் செய்திருத்தலின் அப்பன்னிருபடலம் என்னும் புறப்பொருளிலக்கணநூலுங் கடைச்சங்கக் காலத்தில் இருந்தது என்பதில் ஐயுறவில்லை. இனிக் கடைச்சங்கத்து நூற்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருந்தேவனுர் பாரதம், திருவள்ளுவமாலை, இறையனுரகப்பொருள் என்பனவாகும்.

அக்காலத்துத் தோன்றிய வேறு நூற்கள் தமிழ்வேதமாகிய நாலாயிரப் பிரபந்தத்துள் மூன்ரும் பகுதியாகிய இயற்பாவிலுள்ள முதற்றிருவந்தாதி, இரண்டாந் திருவந்தாதி, மூன்ருந்திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி என்பனவும்; மதுரைக்கணக்காயனுர் மகனுர் - நக்கீரனுர் பாடிய கயிலைபாதி காளத்திபாதி திருவந்தாதி முதலியனவுமாகும்.

## கடைச் சங்கத்துக்குப் பிற்பட்டகாலம்.

இதற்குப் பின்னர்ச்சிறிதுகாலம் வரையினும் தமிழ்நாட்டில் சமணமதந் தழைத்திருந்தது. ஆனுல், அக்காலத்துப் பௌத்தமதம் அடியோடு அழிந்துபோய்விட் வில்லை. அதற்குச்சிறிது பிற்பட்டகாலத் தவதரித்த தொண்டரடிப்பொடி யாழ்வார் தாமருளிச்செய்த திருமாலையில் "புலையறமாகி நின்ற புத்தொடு சமணமெல்லாம்" என்றதனுலும் பிறவற்ருலும் அதுநன்கு விளங்கும்.

இக்காலத்து ஐம்பெருங் காவியங்களுள் முன்னேன்றிய சிலப்பதிகாரமும், மணிமேகலையும் நீங்கலாக மற்றச்சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பனவும், சிறு காப்பியங்கள் ஐந்தும் இன்னுஞ்சில நூற்களுந்தோன்றின. பிங்கலந்தை, திவாகரம் என்னு நிகண்டுகளின் காலமும் இதுவாயிருக்கலாம் போலும்.

பிறகு ஆழ்வார்களில் மற்றை ஏழு ஆழ்வார்களும் ஆண்டாளும் அவதரித்து அன்பிற்கும் அருளுக்கும் இருப்பிடமான அருந்தமிழ்ப் பாசுரங்களை அருளிச்செய்தார்கள். அவைகளும், முற்கூறிய பொய்கையாழ்வார் முதலிய நால்வர் அருளிச்செய்த முதற்றிருவந்தாதி முதலிய நான்கு பிரபந்தங்களும் சேர்ந்தே வைணவர்களின் தமிழ்வேதமாகிய நாலாயிரப் பிரபந்தமாயிற்று.

இக்காலங்களில் அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்திகள் என்னு நாயன்மார்கள் அவதரித்துச்சைவர்களின் தமிழ்வேதமாகிய தேவாரங்களை அருளிச்செய்தார்கள். சைவர்களின் தமிழ் வேதங்களுட்சேர்ந்த திருவாசகத்தையும் அருந்தமிழ் இலக்கியமாய் விளங்குந் திருக்கோவையாரையும் அருளிச்செய்த மாணிக்கவாசக சுவாமிகளின் காலவரையறை பலராற்பலவாறு கூறப்படுதலின் அந்நூற்கள் தோன்றிய காலத்தைப்பற்றி ஒன்றுங்கூறுதற்கில்லை. இக்காலங்களிற் சேரமான்பெருமாள் நாயனுர் முதலிய மற்றுஞ்சில சிவனடியார்கள் தோன்றிப் பொன்வண்ணத்தந்தாதி முதலிய நூற்களை அருளிச்செய்தார்கள். பட்டினத்தார்காலம் இவர்களுக்கெல்லாம் பிற்பட்டதா யிருக்குமெனத் தோன்றுகின்றது.

ஆழ்வார்கள் பதின்மரும் மதுரகவிகளும், ஆண்டாளுமாகிய பன்னிருவருள் கடைச்சங்கக் காலத்தவர் என்று கூறப்பட்ட நால்வர் நீங்கலாக மற்றை எண்மரும், தேவாரப்பதிகங்களை அருளிச்செய்த நாயன்மார்கள் மூவரும் அவதரித்த பிறகுதான் வைணவமதமும், சைவமதமும் தழைத்தோங்குவன வாயின.

நாம் இதுகாறும் கம்பநாடர்தங் காலத்துக்குச்சிறிது சேய்மையதாய் முற்பட்டகாலத்து மதங்களையும், நூற்களையுங்கவனித்து வந்தோம். இனி அவர்காலத்துக்கு மிகவும் அண்மையதாகிய காலத்து நூற்களையும், மதங்களையும் கவனிப்போம். (தொடரும்.)

கோவிந்தராஜ முதலியார்,
பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர், சென்னை.

சீரளவில்லாத் திகழ்தரு கல்விச் செம்பொன்மலையின் சிகரத்தில்விளங்குந் தேசிகோத்தமராய், கருணையோருருக்கொண்டனையராய், பிரசங்காமிர்தம் பெய்யுமுகிலாய், விளங்குகின்ற புலிசை, ஸ்ரீமத் ஞானியார்மடாலயத்து, ஸ்ரீ ல ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகளின் ஆருசீணுக்கமடைகின்றது இத்தமிழ்மகவாதலின், என்றுங் குன்றாத எழில்பெற்று வளர்ந்து வரும் என்பது நிச்சயம்.

---

பத்திரிகைக்கு விஷயம் எழுதுவோர், மததூஷணம் இராஜநிந்தனை முதலியன இன்றித் தெள்ளிய வசனநடையில், தீந்தாவினால் எழுதி அனுப்பல் வேண்டும்.

மறுக்கப்பட்ட விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

விஷயங்களை அறிய விரும்புவோர் ரிப்ளை கார்டு எழுதினால் பதில் கிடைக்கும்.

---

## நீதி சாஸ்திரம்.

நீதிசாஸ்திரம் என்ற சமஸ்கிருதத்துள்ள நூலை தமிழ் உரையுடன் சுலோகத்தையும் தமிழ் எழுத்துகளாலேயே எழுதி மிகச் சிறுபுத்தகமாக அச்சிட்டு வெளியிடப்பட்டு இருக்கிறது.

இது ஒவ்வொரு மனிதர் கரத்தும் இருக்கவேண்டியது அவசியம்.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

விலை அணு 4.

P. L. CASYRAM SINGH & SONS.

General Merchants

Pondicherry.

---

## FRENCH PERFUMERY.

Sents, Soaps, face powders, lotions and oils for hair, Eau de cologne, Lavander, Eau de Quinine, Rose Water, Pommades, Cosmetics and other toilette requisites.

Can be had from

K. APPATHURAY PILLAY,

*Direct importer and General Merchant,*

PONDICHERRY.

Price list will be sent free on application.

30

# அறிவிப்பு

---

## தமிழ் மகவு

"தமிழ் மகவு" எனப்பெயரிய இப்பத்திரிகை கல்வி, அறிவு, ஒழுக்கம், தர்மம், பக்தி, ஞானம், இலக்கண இலக்கிய ஆராய்ச்சி முதலிய பல இன்றியமையாத விஷயங்களோடு வெளியிடப்பட்டு வரும்.

தற்போதுள்ள காகிதப்பஞ்சத்தில் தொடங்கப்பெற்றும் வருடச்சந்தா மிகக்குறைவாகவே வைத்திருப்பதைக் கவனிப்பார்களாயின் இது தமிழின் வளர்ச்சிகருதி எடுத்த முயற்சி என்று எண்ணாமல் இரார்.

தமிழ்ச்சுவை காண்பீர்!

இத் தமிழ்மகவைத் தங்கள் நண்பர் முதலியோர்க்குக்காட்டி அவர்களையும், இதன் இன்மழலைகேட்டு நன்மகிழ்வெய்தும்படி இசைத்துத் தமிழ் தழைத்தற்கா முயற்சிசெய்து தமிழபிமான சீலர்கள் எனச் சிறப்புப்பெயர் எய்துமின்.

---

க0 - சந்தாதாரர்களைச் சேர்த்து முற்பண மனுப்பும்படி செய்பவர்கட்கு இனாமாகப் பத்திரிகை மாதந்தோறும் அனுப்பப்படும்.

மாதிரிப்பத்திரிகை வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தாதாரர்களாய்ச் சேரக்கருதுவோர் வி-பி-யில் அனுப்பும்படி செய்வதைவிட முற்பணம் அனுப்புதல் நன்றாகும்.

விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்படுவதால் முதன்மதியிலிருந்து பத்திரிகையைப் பெறுவதே பயனுடைத்து.

---

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.

REGISTERED No. M.

ஓம்.

நாமகள் நற்றுணை.

# தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

## தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க. | பிங்கள ௵ மார்கழி ௴ 1917-ம் ஆ டிசம்பர் ௴ | மதி — ௩.

உள்ளுறை.

பக்கம்.
க. அறத்துட் சிறந்தது யாது? ... ... ... ௨௫.
௨. பத்துப்பாட்டு. ... ... ... ... ௨௯.
௩. தமிழ் வாக்கியம். ... ... ... ... ௩௨.
௪. நாம் எதனை விரும்புவது? ... ... ... ௩௪.
௫. வசனக்குறிகள். ... ... ... ... ௩௫.

பத்திராசிரியர் :— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்.
புதுவை.

வருடச் சந்தா விவரம் :

| | | | |
|---|---|---|---|
| உள்ளூர்க்கு ... | ரூ ௨ | வெளிநாட்டுக்கு ... | ரூ ௪ |
| வெளியூர்க்கு ... | ரூ ௩ | தனிப் பிரதி ... | அணா ௪ |

## உறுதியுரை.

"கற்றவர் கடவுட் டானஞ் சேர்ந்தவர் களைக ணில்லா
சற்றவ ரந்த ணாள ரன்றியு மவர்கள் போல்வார்க்
குற்றதோ ரிடுக்கண் வந்தா லுதவுதற் குரித்தன் றாயிற்
பெற்றவிவ் வுடம்பு தன்னாற் பெரும்பயனில்லை மன்னோ.
(சூளாமணி)

## முக்கிய குறிப்பு.

தமிழ் நன்மக்கள் பலர்க்கு நமது தமிழ்மகவின் சஞ்சிகைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆதரிப்பார்பாலே மகவுகள் அடைவது உலகியல்பாம். மகவின்கண் விருப்பமற்றவர் மாநிலத்தில் அரியர். நிற்க, நந் தமிழ்மகவை ஆதரிக்காதவர்கள் உடனே தெரிவித்துவிடின் நமது புதுவைத் தமிழ்ச்சங்கத்திற்கு நஷ்டத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்கினவராகார்; ஆகையால், அவர்களும் எமக்கு உதவிசெய்பவராகப் பாவிக்கப் படுவார்கள்.

இம் மூன்றாமதித் தமிழ்மகவைக் கண்ணுற்ற போதேனும் தமது வருடச்சந்தாவை நேரே பத்திராசிரியர் விலாசத்திற்கு அனுப்பிவிட வேண்டுகின்றோம்; இன்றேல், அடுத்த நான்காமதித் தமிழ்மகவு வி-பி-ல் வரும். அப்போதேனும் சந்தாவைச் செலுத்தி நமது மகவை யாதரிக்கத் தகவுடையார் தவறார் என நம்புகின்றோம்.

இங்ஙனம்:
புதுவைத் தமிழ்ச் சங்கத்தின்
அக்கிராசனாதிபதி,
சோ – வேலாயுதன்.

---

நமது மகவுக்கு விஷயதானம் புரிவோர், மததூஷணம், இராஜநிந்தை முதலியன இன்றித் தெள்ளிய வசனநடையில் தீர்தாவினால் எழுதி அனுப்புதல் வேண்டும்.

மறுக்கப்பட்ட விஷயங்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டா. விஷயங்களை அறிய விரும்பியவர்கள் ரிப்ளைகார்டு எழுதினால் பதில் கிடைக்கும்.

காகித விலையேற்றத்தாலும் பிறவற்றாலும் "தமிழ்மகவு" பன்னிரண்டு பக்கங்களில் ஆரம்பிக்கப்பட்டது; ஆயினும், தமிழபிமானிகள் தங்கள் தங்களாற்கூடிய வரையில் சந்தாதாரர்களைச் சேர்த்து உதவி புரிவார்களானால், நம்மகவும் வளர்ச்சியுற்று வெளிவரத் தடையின்று.

(பத்—ர்.)